பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
The EELA NADU

மலர். 19 கார்த்திகை 13 ஜுமாதுல் ஹஜ் 17 இதழ் 289
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 29-11-77

# ‘கருணாநிதிமீதான வழக்கை வாபஸ் பெறமுடியாது!’’

## தமிழக முதல்வர் அறிவிப்பு

சென்னை, நவ. 28

திரு. கருணாநிதி, தி. மு. க. பிரமுகர்கள் மற்றும் தலைவர்கள் மீதுள்ள வழக்கை வாபஸ் பெறமுடியாது என்று தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் இன்று தெரிவித்தார்.

சென்னையில் இன்று பிற்பகல் நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் மாநாட்டில் பேசுகையில் மேற்கண்ட விபரத்தை அவர் வெளியிட்டார்.

“நீதியுடன் குறுக்கிட நாம் விரும்பவில்லை. தி. மு. க. தலைவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் நீதிபதியின் தீர்ப்பைப் பெறமுடியும். நாம் வழக்கை வாபஸ்பெறுவதென்றால் நீதிபதி தீர்ப்பு தேவைப்படாமற் போய்விடும்’’ என்று தெரிவித்த முதலமைச்சர், ‘‘குற்றப் பத்திரிகை தாக்கல்செய்வதில் தாமதம் மேற்கொள்ளப்படுவதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது. தாமதமாக்க வேண்டுமென்ற எண்ணம் எமக்குக் கிடையாது. இது போன்ற பல வழக்குகள் முன்

(6-ம் பக்கம் பார்க்க)

### பேரவையில் நேற்று பிரதமர் கூறினர்—

# ஜனநாயகசோஷலிஸமே ‘பட்ஜட்’டின் குறிக்கோள்

## அரசின்திட்டங்கள்பற்றி ஆறு ஆண்டுகளில் மக்கள் தீர்ப்பளிக்கட்டும்’’

(கொழும்பு)

ஜனநாயக சோஷலிஸ நிர்வாகத்தை ஏற்படுத்துவதே அரசின் நோக்கமாகும். இப்பொழுது தெரிவிக்கப்பட்டிருக்கும் ‘பட்ஜட்’ யோசனைகளினுல், ஆறு ஆண்டுகளில் பெரும் மாற்றங்கள் நாட்டில் ஏற்படும். அரசாங்கத்தின் நடவடிக்கைகள் சரியா பிழையா என்பதை, ஆறு ஆண்டுகளில்மக்களே தீர்ப்பளிப்பார்கள் என்று பிரதமர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன நேற்று பேரவையில் தெரிவித்தார்.

வரவு-செலவுத்திட்டம் மீது தேசிய அரசுப் பேரவையில் நேற்று தொடர்ந்து நடைபெற்ற விவாதத்தில் பிரதமர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

“[illegible] தெரிவித்த பட்ஜட் யோசனைகளை, நான் பொறுப்பேற்கின்றேன். இந்த யோசனைகளைச் சிலர் கண்மூடித்தனமாகக் கண்டிக்கின்றனர். இதில் ஆதாரம் எதுவுமில்லை. அரசாங்கத்தின் ஜனநாயக, சோஷலிஸ கொள்கைகளுக்கமையவே இந்தவரவு-செலவுத் திட்ட யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. அரசின் இந்த நடவடிக்கைகளுக்கு மக்களிடமிருந்து ஆதரவு கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் நாட்டின் அபிவிருத்திக்குரிய சரியான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்தே தீரும். அதே நேரத்தில் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கப்படும். எமது திட்டங்களின்படி 6 ஆண்டுகளில் பெரும் பொருளாதார மாற்றங்கள் இந்த நாட்டில் ஏற்படப் போகிறது. இத்திட்டங்கள் சரியா பிழையா என்பதை ஆறு ஆண்டுகளின் பின்னர் மக்கள் தீர்ப்பளிப்பார்கள்’’ என்றும் பிரதமர் திரு ஜே. ஆர். ஜயவர்த்தன குறிப்பிட்டார்.

## 1000 வர்த்தகர்கள் கைதானுர்கள்!

(கொழும்பு)

கடந்த 5 நாட்களில் விலைக் கட்டுப்பாட்டுப் பிரமாணங்களை மீறிய சுமார் 1,000 வர்த்தகர்கள் கைதுசெய்யப்பட்டதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

மா, சீனி, கொத்தமல்லி ஆகியவற்றின் மீது கொள்ளை லாபம் பெற்ற இந்த வர்த்தகர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## ஆர்ப்பாட்டம், புரட்சிபற்றி ஆனந்தசங்கரி எச்சரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய பட்ஜட் யோசனைகளால் நாட்டில் ஆர்ப்பாட்டமும், புரட்சியும் ஏற்படலாமென்று கிளிநொச்சி தொகுதி தேசிய பேரவை உறுப்பினர் திரு. ஆனந்தசங்கரி நேற்று பேரவையில் எச்சரிக்கை விடுத்தார்!

வரவு-செலவுத் திட்டத்தின் மீது தொடர்ந்து நடைபெற்று வரும் விவாதத்தில் திரு. ஆனந்தசங்கரி நேற்று பேசுகையில்,

“இந்த நாட்டில்ஒருதடவை எதிர்க்கட்சியாக இயங்கும் கட்சி மறுமுறை ஆட்சி பீடத்தை அலங்கரிப்பது ஒரு மரபாக உள்ளது. ஆனுல், தமிழ்மக்களின் கட்சிகளைப் பொறுத்தவரை இது எதிர்மாருக உள்ளது.

“ஆட்சிமன்றத்துக்கு வந்திருக்கும் புதியஉறுப்பினர்களின் பேச்சுக்கள் கவலையும் வேதனையும் அளிக்கிறது. தமிழ் மக்களின் இன்னல்களைச் சரிவரப் புரிந்துகொள்ளாமல், வகுப்புவாதத்தை மேலும் கிளறிவிடுகின்றனர்.

“300 ரூபா மாதச்சம்பள நிர்ணயம் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. இதனை 500-600 ரூபாவாக உயர்த்தவேண்டும். இது நடக்காதபட்சத்தில், நாட்டுமக்களின் எதிர்ப்பை அரசாங்கம் எதிர்நோக்க நேரிடும். ஆர்ப்பாட்டங்களும், புரட்சியும் வெடிக்கும்’’ என்று குறிப்பிட்டார்.

## பொலிசார் கண்காணிப்பு

(கொழும்பு)

நாட்டிலுள்ள சகலபொலிஸ் நிலையங்களையும் சேர்ந்த சுமார் 500 பொலிசார் சாதாரண உடையில் நாள் முழுவதும் தீவிரகண்காணிப்பில் ஈடுபடுவார்கள்.

அரசுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபடுவோரையும் வன்செயல்களில் ஈடுபடுவோரையும் கண்காணிப்பதற்கே இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. 78ம் ஆண்டு ஜனவரி 1ம் தேதி முதல் இப் பிரிவு துப்புத்துலக்கும் பகுதிக்குக்கீழ் இயங்கவிருக்கிறது. சகல துப்புத் துலக்கும் பிரிவுக்கும் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் பொறுப்பாகக் கடமையாற்றுவார். (க-அ)

### “தமிழ் ஈழத்தின்

# சுதந்திரத்தைமீட்க தியாகம் செய்யுங்கள்!’’

## கூட்டணி எம். பி. க்களுக்கு தமிழ் இளைஞர் பேரவை கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

“தமிழ் ஈழத்தின் சுதந்திரத்தைமீட்க தந்தை செல்வாவின் சமாதியில் செய்த சத்தியத்தின்படி, தமிழ்மக்களின் நம்பிக்கையை பெற்றுக் கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி க்கள்; தம்மை முழுமையாகவும், முழு நேரமும் அர்ப்பணித்து இயங்கி தியாகம்செய்யவேண்டும்’’

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள வர்த்தக சம்மேளனகட்டடத்தில்நடந்த தமிழ் இளைஞர் பேரவை கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம், காரசாரமான விவாதத்தின்பின் ஏகமனதாக நிறைவேறியது.

இளைஞர் பேரவை தலைவர் மாவை சேனுதிராசா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் வவுனியா, திருமலை, மட்டக்களப்பிலிருந்தும் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

“தமிழர் கூட்டணி எம்.பி.க்கள், பாராளுமன்ற இயக்கமாகாமல், தமிழினத்தின் விடுதலை இயக்கமாக மாற்றுவதற்கு உடன் நடவடிக்கை எடுங்கள் என்றுவேதனைஉணர்வுகளோடு வற்புறுத்தி கேட்டுக்கொள்கிறோம்’’ என்றும் அந்த தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

அத்தீர்மானத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: ‘தமிழர் விடுதலைக்கூட்டணி சென்ற பொதுத்தேர்தலில் தமிழர்களின் பூரண அங்கீகாரத்தை பெற்று தேர்தல் அறிக்கையில் சிங்கள ஆட்சிபீடத்தை லட்சியப் போராட்டத்தின் ஒருகளமாகப் பாவிக்கும் அதேவேளையில் தமிழ் ஈழ தேசிய மன்றம் அமைத்து தமிழ் ஈழத்திற்கு ஒரு அரசியல் அமைப்பை ஆக்கவும், அதை நடைமுறைப்படுத்துவதன்மூலம் தமிழ் ஈழத்தின் சுதந்திரத்தை நிலைநாட்டுவதற்கு சமாதான வழிமூலமோ நேரடி போராட்டங்கள் மூலமோ நடவடிக்கை எடுக்கும்

( 6ம் பக்கம் பார்க்க )

## ஆந்திராவில்

ஹைதராபாத், நவ. 28

ஆந்திரப் பிரதேச சுகாதார அமைச்சர் திரு. கே. ராஜமன்னு இன்று ஆந்திரா முதல் அமைச்சரால் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

# சந்தேகநபர் கைது

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை சந்தியில் நின்றுகொண்டு, பயங்கர ஆயுதங்களைக்காட்டி பயமுறுத்தி, பொதுமக்களைத் தாக்கிக் கொண்டிருந்ததாகக் கூறப்படும் ஒருவரை ஆனைக்கோட்டைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் மடக்கிப்பிடித்தனர்.

சந்தேகநபரான செல்லப்பா செல்வம் (21 வயது) கடந்த ஆறுமாதங்களாக கொள்ளை, களவு சம்பந்தமாகப் பொலிஸாரினுல் தேடப்பட்டு வந்தவர் என்று கூறப்பட்டது.

# காலப்பெட்டகம் தோண்டப்பட்டது!

புதுடில்லி, நவ. 28

டில்லி செங்கோட்டையில் புதைக்கப்பட்ட வெள்ளி விழாக் காலப் பெட்டகத்தைத் தோண்டும் முயற்சிகள் இன்று காலை ஆரம்பிக்கப்பட்டன.

முன்னுள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் பணிப்பின் மீதே இக்காலப் பெட்டகம், கடந்த 1973ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ந் திகதி டில்லி செங்கோட்டையில் புதைக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

இன்று காலை ஆரம்பிக்கப்பட்ட தோண்டும் வேலைகள் இச்செய்தி அச்சுக்கு போகும் வரை பூர்த்திபெறவில்லை.

நாட்டின் வாலாற்று நிபுணர்கள் சிலர் எழுப்பிய கண்டனங்களைத் தொடர்ந்தே இக்காலப் பெட்டகம் தோண்டப்படுவதாகஇன்று அறிவிக்கப்பட்டது.

இரகசியமாக உள்ள தஸ்தாவேஜில் 10,000 வார்த்தைகள் இடம்பெற்றிருக்கின்றன என்றும் இதில் என்ன உள்ளது என்பது இரகசியமாக, இருந்தாலும் மறைந்த மாபெரும் தலைவர்களான சுபாஸ் சந்திரபோஸ் டாக்டர் ராஜேந்திரபிரசாத் ராஜகோபாலாச்சாரியார் [ராஜாஜி] போன்ருேர் பற்றி எதுவுமே குறிப்பிடப்படவில்லை என்று சர்ச்சைக்குரிய வரலாற்று ஆசிரியர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கொடிகாமம் சந்தைக்கு அருகாமையில் இரண்டு பரப்பு காணியும் மேல்மாடியுடன் கூடிய இரு கடைகளும், தனித் தனி ஏறுவதற்கு படிகளும் அக்கூசும் அமைந்தது] விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: ஜனுப் V. முத்துராஜா, மார்க்கட், சாவகச்சேரி. 7785


## காவல்

[வவனியா]

வவனியாவில் உள்ள சகல இலங்கைவங்கி, மக்கள்வங்கி, கிராமியவங்கிக் கிளைகளிலும் ஆயுதம் தாங்கிய இராணுவத்தினரும் ஆயுதம் தாங்கிய பொலிஸாரும் காவல் புரிந்து வருகின்றனர். [உ]

## கடனுதவிபெற வாய்ப்பு

[பூநகரி]

பூநகரி மன்னார் வீதி 4ம் கட்டையில் இருக்கும் கமத்தொழில் சேவை நிலையம் விவசாயிகள் இவ்வளவு காலமாக பலன் அடையமுடியாத நிலையில் ஆதரவற்றதாக இருந்து வந்தது இப்பொழுது அரசினர் எடுத்துக்கொண்ட நடவடிக்கையின் பயனாக விவசாயிகள் இலங்கை வங்கியில் கடன் உதவிபெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் நாளாந்தம் 150க்கு மேற்பட்ட விவசாயிகள் அங்கு சென்று தமது கடன்களை பெறுவதற்கான படிவங்களை பெற்றுவருகின்றனர்.

இதேவேளை வேறு பிரதேசங்களிஉள்ளகமத்தொழில்சேவை நிலையத்தில் சுமார் 10ஊழியர்களுக்கு மேற்பட்டோர் கடமைபுரியும் நேரத்தில் பூநகரி கமத்தொழில் சேவை நிலையத்தில் ஒரே ஒரு ஊழியர் இலிகிதராக கடமையாற்றி வருகின்றதை அவதானித்த விவசாயிகள் புலம்பவேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

இப்படியிருந்தும் அவ் இலிகிதர் விவசாயிகளுக்கு வேண்டிய உதவிகளை தனித்துச் செய்து கொடுப்பதற்கு விவசாயிகள் நன்றிதெரிவிக்கின்றனர். [உ]


சுன்னாகம்

**பல. நோ. கூ. சங்கம்.**

(வரைவுள்ளது)

சுன்னாகம்.

## கேள்வி விளம்பரம்

சுன்னாகம் பல. நோ. கூ. சங்கத்தில் 4500க்கு மேற்பட்ட வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திரமூலம் விற்பனைக்கிருக்கின்றன.

கேள்விப்பத்திரங்கள் 2-12-77 வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் ரூபா 250/- மீளளிப்பு வைப்புப் பணமாகச் செலுத்தி காரியாலய வேலை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் வைக்கப்படும் தபால் உறைகளில் அரக்கு முத்திரையிட்டே ஒப்படைக்கப்படல்வேண்டும். கேள்விப்பத்திரங்கள் 2-12-77 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறும் எமது சங்க வியாபார உப சபையினரால் உடைக்கப்படும்.

பொது முகாமையாளர்,
சுன்னாகம்
பல. நோ. கூ. சங்கம்.

26-11-1977. 7780



## நிருபர்கள் தேவை

'ஈழநாடு' பத்திரிகைக்கு கிளிநொச்சி, சாவகச்சேரி, பருத்தித்துறை, வட்டுக்கோட்டை, மல்லாகம் ஆகிய இடங்களுக்குச் செய்தி சேகரிப்பதற்கு நிருபர்கள் தேவை. சொந்தக் கையெழுத்தில், இரு நற்சாட்சிப்பத்திரங்களுடனும் கல்வித் தகைமைகள் பற்றிய விபரங்களுடனும் 'ஆசிரியர், ஈழநாடு, த. பெ. இல. 49, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.



## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 12686

1. துரையப்பா பத்தர் கோபாலசாமி,
   33, கந்தரோடை ரோட், வண்ணார்பண்ணை கிழக்கு,
   யாழ்ப்பாணம்.

வழக்காளி

எதிராக

1. வைத்திலிங்கம் சுப்பிரமணியமும்
2. ஜெகசோதி இருவரும்
   பருத்தித்துறைரோட், நல்லூர்.
3. சுப்பிரமணியம் சூரியதேவனும்
4. மனைவி லீலாவதி இருவரும் மல்லாகம்.
5. கணபதிப்பிள்ளை நடராசா,
   92, பருத்தித்துறை ரோட், குருநாதசுவாமிகோவிலடி

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் MB 1:86-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக் காணி 1978-ம் வருஷம் தை மாதம் 4-ந் திகதி (4-1-78) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபாய் 2795/-ம் 9-8-71 தொடக்கம் 19-2-73 வரைக்கும் ரூபாய் 2000/-க்கு 12% வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5% வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 556-13 சதம்.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கு கோப்பாய் கோவிற்பற்று இருபாலை இறை (நாவல் எல்லை அல்லது நாவலடி) என்றும் அழைக்கப்படும் காணி நி. பர. 3. புதுக்கக் கட்டப்பட்ட வீடும் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லைகிழக்கு பாலசுப்பிரமணியசுவாமி கோவில், வடக்கு காலஞ்சென்ற பாக்கியலட்சுமி கந்தசாமியின் உரிமைக்காரர். மேற்கு விசுவநாதன் சின்னத்தம்பியும் மனைவி பாலசௌந்தரி, தெற்கு குமாரசுவாமியும் பாலசுப்பிரமணியசுவாமி கோவில்.

இ. கனகரெத்தினம்,
ஷெரிஷனரும் விலைமதிப்பாளரும்.

இராமுப்பிள்ளை வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். 7782


மாவட்ட மந்திரி பதவிகளை

# ஏற்பதா? விடுவதா?

**கடந்த பொதுத்தேர்தலில் 'தமிழ்ஈழ'க் கொள்கையை முன்வைத்துத் தமிழ்ப் பிரதேசங்களில் பெரும்பான்மையாக வெற்றியீட்டி எதிர்க்கட்சித்தலைமையையும் ஏற்றுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி மாவட்ட மந்திரி பதவிகளை ஏற்கலாமா? மாவட்ட மந்திரிபதவிகளைக் கூட்டணியினர் ஏற்பதன் மூலமே தமிழ் ஈழத்திற்கான பொருளாதாரத்தைக் கட்டி வளர்க்கலாம என்கிறார்கள் சட்டத்தரணிகள் ஆர். பாலசுப்பிரமணியமும், கே. சற்குணநாதனும். மற்றும் எவரும் இது சம்பந்தமான கருத்துக்களை எழுதினால் அவற்றைப் பிரசுரிப்போம்—ஆ-ர்.**

(நமது நிருபர்

"தமிழர் இறமை தமிழரிடம் வந்துவிட்டதென்று கூறிக்கொண்டு இருக்கும் நாம் வேறு ஒருவர் மாவட்ட மந்திரிப்பதவி ஏற்று இங்குவந்து எங்களை ஆளுவதற்கு ஒரு போதும்இடமளிக்கக்கூடாது"

தேசிய அரசாங்கத்தில் அமரர் திருச்செல்வம் உள்ளூராட்சிஅமைச்சராகக் கடமையாற்றியபோது அவரின் செயலாளராகப் பணியாற்றிய சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் மேற்கண்டவாறு கூறினார்.

சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் மேலும் கூறியதாவது:

"தமிழ்அரச ஊழியர்கள் சில பதவிகள் வகிக்கும்போது, அவர்கள் மூலம் பல விடயங்களை மேன்முறையீடுசெய்யாமல் அவர்களிடம் செய்து கொள்ளலாம் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். இதேபோல் மாவட்டமந்திரியாக ஒரு தமிழர் இருந்தால், அவர் தமிழ்ப்பிரதேசப் பொருளாதார அபிவிருத்தியைப் பன்மடங்கு பெருக்குவதற்கும் பெரும் உதவியாக இருக்கும்.

### கட்டுப்படவேண்டிய நியதியில்லை

"மாவட்டமந்திரி நியமிக்கப்பட்டமந்திரியாக இருந்தால் நியமனம் செய்தவரின் சொல்லை, எல்லா விஷயங்களிலும் கேட்டு நடக்கவேண்டும் என்ற நியதிஇல்லை. அடிப்படைக் கருத்துக்கு மாறுபாடான முறையில் கருமமாற்றவேண்டும் என நிர்ப்பந்திக்கும் வேளையில் அவர் பதவியிலிருந்துவிலகிக்கொள்ள வேண்டிய நடவடிக்கையை எடுக்கலாம்.

பூரணசுதந்திரம் கிடைக்கும் வரை பாராளுமன்றத்தில் இருந்தாலென்ன வேறு எங்கிருந்தாலென்ன ஓரளவு விஸ்வாசப்பிரமாணத்திற்குஅமைய நடக்கத்தான் வேண்டும்என்று சொல்லக்கூடும்.

அரசியல் சாசனத்திற்கு விஸ்வாசப்பிரமாணம் எடுத்தவர்கள் எல்லாரும் அரசியல் திட்டத்தை ஏற்றுவிட்டார்கள் எனக் கருதக்கூடாது என்று பாராளுமன்றத்தில் பகிரங்கமாகத் தமிழ் எம்.பிக்கள் கூறியிருக்கிறார்கள். அதேபோன்றுதான் மாவட்ட மந்திரிபதவி ஏற்பதும் அரசின் கொள்கையை ஏற்றதாகக் கருதப்படும்என்பது பொருத்தமற்றதாகும்.

### தமிழ் மக்களுக்குச் செய்யும் கடமையாகக் கருதலாம்

நமக்குள்ள ஒரேயொரு பிரச்னை பொருளாதார அபிவிருத்திதான். மாவட்டமந்திரியை ஒரு பதவி என்று கணிக்காமல், தமிழ்மக்களுக்குச் செய்யும் கடமையாக கணித்து, அக் கடமையைச் செய்வதன் மூலம் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடையலாமா இல்லையா என்பதுதான் கேள்வி.

என்றோஒருநாள் நாம் பூரண சுதந்திரமடைய வேண்டுமானால், நமது பொருளாதார அபிவிருத்தி முக்கியம். எனவே மாவட்டமந்திரி பதவியை ஏற்பதா - இல்லையா என்பதை நன்றாக ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருவது நல்லது.

அவசரப்பட்டு 'மந்திரிப் பதவி' என்ற சொல்லுக்காக, அதை ஏற்கக்கூடாது,

மாவட்ட மந்திரிப் பதவிகளைக் கூட்டணி முதலில்ஏற்க வேண்டும். அதன்பின் மக்களே மேயரைத் தெரிவுசெய்யத் திருத்தம் கொண்டுவந்தது போல அந்தந்த மாவட்ட மக்களே நேரடியாக மாவட்ட மந்திரிகளைத் தெரிவுசெய்ய வேண்டும் என்று ஒரு திருத்தத்தைக்கொண்டுவர அரசை வலியுறுத்தவேண்டும். அப்படியானால்தான் பிரதேச சுயாட்சி முறையை அமைக்க வழிவகுக்கலாம்.

மாவட்டமந்திரி மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்ட மந்திரியாக இருந்தால் அவர்களுக்குக்கூடிய சுதந்திரம் இருக்கும். அப்படித்தெரிவு செய்யப்பட்டால் ஏதாவது காரணத்திற்காக அவரை நீக்கலாமேயொழிய புதிதாக ஒரு மாவட்ட மந்திரியை நியமிக்க முடியாது.

### தமிழ்ஈழம் தூரநோக்கில்

நல்லூர் 12-ம் வட்டாரத் தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளைத் தலைவர் சட்டத்தரணி கே. சற்குணநாதன் தெரிவித்ததாவது:

"எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஏற்றுள்ளோம். மற்றும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நெறியாளர் பதவிகளையும் ஏற்கத் தயாராக இருக்கிறோம். இந்த நிலையில் மாவட்ட மந்திரிப்பதவிகளை ஏற்பதில் தவறு இருப்பதாகத் தெரியவில்லை.

"தமிழ் ஈழப் போராட்டம் தூரநோக்கில் பார்க்கப்படுகிறது. 'தமிழ் ஈழம்' நமது முக்கிய கொள்கையாக இருந்தாலும் முதலில் நமது பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பவேண்டும் என்பதை ஆகஸ்ட் கலவரத்தின்பின் உணர்ந்துகொண்டோம்.

"சமூக அரசியல் அமைப்பில் இந்த அரசை நம்பித்தான் நாம் எமது பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப வேண்டிய இக்கட்டான நிலையிலிருக்கின்றோம்.

"எத்தனையோ தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் படித்து வீட்டு வேலையற்றிருக்கிறார்கள். பசிக்கின்ற வயிற்றுக்கு முதல் உணவு கொடுக்கவேண்டும்.

### பொருத்தமற்ற வாதம்

"மாவட்ட மந்திரிப் பதவி பெறக்கூடாதென்பது பொருத்தமற்றவாதமாகும். மாவட்ட மந்திரிப் பதவியை ஏற்கக்கூடாதென்றால் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நெறியாளர் பதவிகளையும், கடற்றொழிலாளர் சங்க இயக்குநர் பதவிகளையும் ஏற்கத் தயாராக இருப்பது சரியாகுமா? சிறிய தேவைகளுக்காக அமைச்சர்களைச் சந்திக்கச் செல்வது முறையாகுமா?

"மாவட்ட மந்திரிப் பதவிகளை ஏற்றுக்கொண்டால் நாங்கள் எங்கள் பிரதேசத்திற்குத் தேவையான விஷயங்களைக் கொழும்பிற்குச் செல்லாமல் செய்துகொள்ளலாம்.

### சிங்களக் குடியேற்றத்துக்கு வாய்ப்பாகும்

மாவட்ட மந்திரி பதவிகளைக் கூட்டணியினர் ஏற்காவிட்டால், அதனை வேறு ஒரு எம். பி ஏற்றுக்கொள்வார். அப்படி வேறு ஒருவர் ஏற்றுக்கொண்டால் அந்தச் சூழ்நிலையில், நமது முக்கிய விடயமான சிங்களக் குடியேற்றத்தை நாம் எவ்விதத்திலும் தடுக்கமுடியாமல் போய்விடும்.

மாவட்ட மந்திரி பதவியைக் கூட்டணி ஏற்காமல்விடுவது, தமிழ் ஈழப் போராட்டத்திலிருந்து விலகிச் செல்வதாயிருக்குமேதவிர, அணுகிச் செல்வதாக இருக்காது.

தமிழ் ஈழப் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பவேண்டுமானால் அவசியம் கூட்டணி எம்.பிக்கள் மாவட்டமந்திரி பதவிகளை ஏற்கவேண்டும். உணர்ச்சிப்பேச்சுகளினால் எம் பொருளாதாரத்தை கட்டி எழுப்பமுடியாது.

"நடைமுறையில் பார்க்கப் போனால் தமிழ் எம்.பிக்களுக்கு அரசு கோட்டா மூலம் உத்தியோகங்கள் வழங்குகிறது. தமிழ் எம்.பி.க்கள் வேலைகளுக்குச் சிபாரிசு செய்கின்றார்கள். தமிழ் எம்.பி களின் காரியாலயங்களில் உத்தியோகத்திற்

[6-ம் பக்கம் பார்க்க]


## கேள்வி அறிவித்தல்

### கிராமசபை கோப்பாய்

கோப்பாய் கிராமசபை விசேட ஆணையாளரால் கீழ்க்காணப்படும் கடைகளில் 1978க் ஆண்டு வியாபாரம் செய்வதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் 1-12-77ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணி வரைக்கும் வழங்கப்படும்.

கேள்விகள் 5-12-77ம் திகதி திங்கட்கிழமைமுற்பகல் 10-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**கடைகள்**

1. இருபாலைமாட்டிறைச்சிக் கடை.
2. கோப்பாய் ஆட்டிறைச்சிக்கடை.

கேள்விப் பத்திரப்பணம் ரூபா 10-00,

கேள்விப்பத்திர வைப்புப் பணம் 50-00.

கா. மாணிக்கவாசகர்
விசேட ஆணையாளர்,
கிராமசபை, கோப்பாய்.

விசேட ஆணையாளர்
அலுவலகம்,
கிராமசபை, கோப்பாய். 7781



## தேவை

பிரபல சாய்ப்புச்சாமான் விற்பனை நிலையமொன்றிற்கு அனுபவமுடைய

**சிட்டை எழுதுநர்கள் (Bill Clerks)**

**விற்பனையாளர்கள் (Salesmen)**

உடனடியாகத் தேவை விண்ணப்பிக்கவும்

விளம்பர இல. 0001

C/o ஈழநாடு.

உத்தேச கெய்ரோ மகாநாடு:

# இஸ்ரேல் மட்டுமே பங்குபற்றினாலும் சமரசத்தீர்வு சாத்தியம்

## எகிப்திய அதிபர் அறிவிப்பு

கெய்ரோ, நவ. 28

கெய்ரோவில் நடத்த உத்தேசித்துள்ள மகாநாட்டில் இஸ்ரேல் மட்டுமே கலந்துகொண்டாலும் அம் மகாநாட்டில் மத்தியகிழக்குப் பிரச்சினை குறித்து விரிவாக ஆராய்ந்து தீர்க்கமான முடிவு எடுக்கப்படும் என்று எகிப்திய அதிபர் திரு. அன்வர் சதாத் தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்குப் பிரச்சினை குறித்து தீர்க்கமான ஒரு முடிவு காண்பதற்காக கெய்ரோவில் தாம் கூட்ட இருக்கும் மகாநாட்டுக்கு இஸ்ரேல், சோவியத்யூனியன், அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கும் அரபுநாடுகளுக்கும் எகிப்திய அதிபர் ஜனாப் அன்வர்சதாத் அழைப்பு விடுத்திருந்தார்.

தமது அழைப்பை இஸ்ரேல் தவிர்ந்த ஏனைய நாடுகள் எதுவும் ஏற்றுக்கொள்ளாதது குறித்து கருத்துத்தெரிவிக்கையிலேயே ஜனாப் சதாத் மேற்கண்டவாறு கூறினார்.

தாம் திட்டமிட்டபடி இம் மாநாடு நடைபெறும் என்றும் இம்மாநாட்டினால்பெரும் பலன் ஏற்படும் எனத் தாம் நம்புவதாகவும் ஜனாப் சதாத் தெரிவித்துள்ளார்.

### ரஷ்யா கருத்து

மத்தியகிழக்கு சமாதானம் குறித்து ஜெனீவா மாநாட்டுடன் எதுவித தொடர்புமின்றி இப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு எகிப்து முனைந்துவருகிறது என்று ரஷ்யா கருத்துத் தெரிவித்துள்ளது.

### திரிப்போலி மாநாடு

இதேவேளையில் எகிப்திய அதிபரின் இஸ்ரேலிய விஜயம் குறித்தும் மத்தியகிழக்கு விவகாரம் தொடர்பாக ஜனாப் சதாத்தின் போக்குக் குறித்தும் ஆராயும்பொருட்டு அரபு நாடுகள் லிபிய தலைநகரான திரிப்பொலியில் எதிர்வரும் வியாழக்கிழமை கூடுகின்றன. (இ)

---

இந்திய வானொலி நிலைய —

# தீ வைப்பு:

## தகவலுக்கு ரூ. 5,000 சன்மானம்

புதுடில்லி, நவ. 28

இந்திய வானொலி நிலையத் தீவைப்பு சம்பவம் தொடர்பான ஆதார பூர்வமான தகவல்களைத் தருவோருக்கு 5ஆயிரம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என்று புதுடில்லி பொலிஸ்மா அதிபர் திரு. சௌத்ரி தெரிவித்துள்ளார்

கடந்த வெள்ளியன்று புதுடில்லி வானொலி நிலையசெய்திப் பிரிவில் ஏற்பட்ட தீவிபத்துக்கு நாசவேலையே காரணம் என்றும் அங்கு தீப்பற்றிய போது இருவர் அங்கிருந்து ஓடியதாகவும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. [இ]

---

# புயல் நிவாரண நிதிக்கு மொரார்ஜியின் சம்பளம்

புதுடில்லி, நவ. 28

இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் தமிழ் நாடு, ஆந்திரா புயல் நிவாரண நிதிக்குத் தமது ஒரு மாதச் சம்பளத்தை வழங்கியுள்ளார்.

மற்றும் உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங், சுகாதார அமைச்சர் திரு. ராஜ்நாராயண் சட்ட அமைச்சர் திரு காந்தி பூஷண் தொழில் மந்திரி திரு. ரவீந்திரவர்மா, லோகசபை சபாநாயகர் திரு. கெக்டே ஆகியோரும் புயல் நிவாரண நிதிக்குத் தமது ஒரு மாதச் சம்பளத்தை வழங்கியுள்ளனர். [இ]

---

# வெள்ளப் பெருக்கு பீதி!

திருச்சி, நவ. 28

திருச்சி மாவட்டத்தில் நேற்றுப் பெய்த பெருமழையை அடுத்து அங்குள்ள ஆறுகள் எந்நேரமும்பெருக்கெடுக்கலாம் என்றும் மீண்டும் ஒரு வெள்ளப் பெருக்கு ஏற்படலாமென்றும் அப்பகுதி மக்கள் பெரும் பீதி அடைந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது. (இ)

---

ஒரே குழிகளில்

# மனித, கால்நடை சடலங்கள் புதைப்பு!

ஹைதராபாத், நவ 28

ஆந்திரபிரதேசத்தில் அண்மையில் வீசிய சூறாவளியின் கோரப்பசிக்கு 15 ஆயிரம் பேர் இரையானார்கள் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டபோதிலும் 20லிருந்து 25 ஆயிரம் பேர் வரை சூறாவளிக்குப் பலியாகியிருக்கலாம் என்று அரசு அதிகாரிகள் மதிப்பிட்டுள்ளனர்.

ஆங்காங்கே அனாதரவாகக் கிடக்கும் மனிதசடலங்களிலிருந்தும் கால்நடைகளின் சடலங்களிலிருந்தும் துர்நாற்றம் வீசிக்கொண்டிருப்பதாகவும் பெருவெள்ளம் ஏற்பட்ட பகுதிகளில் வெள்ளத்தில் மிதக்கும் சடலங்களை அகற்றுவதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் நீண்டநாட்களாக அழுகிக்கிடக்கும் சடலங்கள் உருக்குலைந்தநிலையில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### பெரிய குழிகளில்

கால்நடைகளினதும் மனிதர்களதும் சடலங்கள் பெரிய குழிகளில் போட்டு புதைக்கப்படுவதாகவும் வசதியான இடங்களில் மனித சடலங்கள் கூடிய வரை தகனம்செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ)

---

# தாய்ச் சங்கத்துடன் தொடர்பு

(வவுனியா)

வவுனியாவில் உள்ள ஆசிரியர்கள் ஏனைய உத்தியோகத்தர் போன்று தமக்கும் பருவகால புகையிரதச் சீட்டு வழங்குமாறு விடுத்த கோரிக்கையை பிரதம கல்வியதிகாரி ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டாராம் இக்கோரிக்கை தொடர்பாக, இலங்கை ஆசிரியர் சங்க மத்திய குழு உறுப்பினர் திரு. கே. வேலுப்பிள்ளை தாய்ச் சங்கத்துடன் தொடர்பு கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. )உ)

---

# எண்ணெய்விலையை அதிகரிக்க 9 நாடுகள் இணக்கம்

## 8 வீதம் உயர்த்த ஆலோசனை

லண்டன், நவ. 28

அடுத்த ஆண்டில் எண்ணெயின் விலையை மேலும் அதிகரிக்க 9 'ஒப்பெக்' நிறுவன நாடுகள் இணக்கம் தெரிவித்துள்ளன.

அடுத்த ஆண்டில் எண்ணெயின் விலையை அதிகரிப்பது தொடர்பாக ஆராயும் பொருட்டு எண்ணெய் உற்பத்தி ஏற்றுமதி நாடுகள் ஸ்தாபனம் அடுத்தமாதம் கரக்காஸில் முடிவு எடுக்க உள்ளன.

இந்த ஸ்தாபனத்தில் அங்கம்வகிக்கும் 13 நாடுகளில் சவூதிஅரேபியா ஐக்கியஅரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகள் உட்பட நான்கு நாடுகள் தவிர்ந்த 9 நாடுகளே இப்போது எண்ணெயின் விலையை அதிகரிக்க இணக்கம்தெரிவித்துள்ளன.

### 5 8 சத வீதம் அதிகரிப்பு

இதேவேளையில், எண்ணெயின் விலையை 5 அல்லது 8 சத வீதமாக அதிகரிக்கலாம் என்று வெனிசூலா ஜனாதிபதி கருத்து தெரிவித்துள்ளார். (இ)

---

"சென். ஜோன்ஸ் கல்லூரியின்

# மாஜி மாணவன் என்பதில் எனக்குத் தனிப்பெருமை"

— யாழ். எம். பி.

[அரியாலை[

"யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியில் கல்வி கற்ற அநேகர் உலகின் பல பாகங்களிலும் மிகவும் உயர்ந்த பதவிகளை வகித்து வருகின்றனர். இக்கல்லூரி வடபகுதியில் கல்வியுலகில் கடந்த நூற்றுண்டுகாலமாக சிறந்த பணி புரிந்து வருவது பாராட்டத்தக்கது. இக் கல்லூரி சிறந்த வைத்தியர்களையும், சிறந்த பொறியியலாளர்களையும், சிறந்த சட்ட வல்லுநர்களையும் நாட்டிற்கு அளித்ததுடன் சிறந்த அரசியல் வாதிகளையும் இந்நாட்டிற்கு வழங்கியுள்ளது. இக்கல்லூரியில் கல்வி கற்ற மாணவர்களில் நானும் ஒருவன் என்பதில் எனக்கொரு தனிப் பெருமையும்-மனமகிழ்வும் ஏற்படுகிறது."

இவ்வாறு யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரியின் உயர்வகுப்பு மாணவர்களின் இரவுப் போசன விருந்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாணத் தொகுதி தேசிய அரசுபேரவை உறுப்பினர் திரு வெ.யோகேஸ்வரன் பேசுகையில் குறிப்பிட்டார்.

செல்வன் சுந்தரலிங்கம் உதயகுமார் தலைமையில் நடைபெற்ற மேற்படிவிருந்தில் திரு. யோகேஸ்வரன் தொடர்ந்து பேசுகையில், "இக்கல்லூரியில் கல்வி கற்ற மாணவர்களிடம் கடமையுணர்வு, பெருந்தன்மை, விசுவாசம் என்பன நிறைய இருப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. இதனையே எதிர்காலத்திலும் கல்வி கற்கும் மாணவர் கைக்கொண்டு முன்னேறவேண்டும்" என்று குறிப்பிட்டார்.

மேற்படி விருந்தில் இலங்கைப் பல்கலைக்கழக யாழ் வளாக மனித இயல்பீடத் தலைவர் கலாநிதி லூதர் ஜெயசிங்கம், கல்லூரி அதிபர் திரு. செ.எ.ஆனந்தராசா, மாணவர் தலைவர். செல்வன் வே. ஆர். யோசுவர், செல்வி செல்வ கௌரி அனுதரட்சகர் ஆகியோரும் பேசினர். [உ]

---

# வெள்ளத்தால் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் சந்தைக்குச் சமீபத்திலுள்ள மீசாலை வடக்கு ஊரெல்லை வாய்க்கால் கடந்த 10 வருடங்களாக வெட்டப்படாததினால் அப்பகுதியில் வெள்ளம் தேங்கி நிற்கிறது. இதனால் அப்பகுதியில் வாழும் மக்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர் இதுபற்றிச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அப்பகுதிமக்கள் புகார் செய்துள்ளனர். (க-அ)

......

# வட்டு. எம். பியிடம் மகஜர் கையளிப்பு

[சங்கானை[

மாதகல் கடற்கரைப் பகுதியில் இறங்குதுறை வசதியில்லாதிருப்பதாலும் வெளிச்ச வசதியின்மை கடற்றொழில் உபகரணங்களான இயந்திர வள்ளம் வலைமால் போன்றவை போதியவை இல்லாமையாலும் இவற்றை பெற்றுத் தரும் வண்ணம் பண்டத்தரிப்பு மீனவர் கூட்டுறவுச்சங்கம் மகஜர் ஒன்றை வட்டுக்கோட்டைத் தொகுதி தேசிய பேரவை உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசுவிடம் கையளித்துள்ளது.

மேலும் அந்த மஜரில் கூறப்பட்டுள்ளதாவது எமது நாட்டிற்கு ஓரளவு அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் கடல் அட்டைத்தொழில் ஈடுபடும் அங்கத்தவர்களுக்கு இத்தொழிலைத் திறம்பட நடாத்துவதற்கு போதிய பணவசதி தேவையாக இருப்பதால் முற்பணம் வழங்குவதற்கு 1976 ல் சங்கானை மக்கள் வங்கியிலிருந்து ரூபா 250,000 மேலதிக பற்றுகப் பெற்றுள்ளோம். தற்பொழுது நூற்றிற்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளதால் மேலும் ரூபா.500,000 மக்கள் வங்கியில் பெற்றுத்தர வேண்டும்.

சீநோர் நிறுவனம் தயாரிக்கும் வலைமால்களை வட பகுதியில் உள்ள ஆரம்பமீன்பிடிச் சங்கங்கட்கு விநியோகிப்பதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல் காக்கைதீவு நவாலிபோன்ற இடங்களின் பொதுவான இடத்தில் இறங்குதுறை அமைத்தல் எரிபொருள் ஐஸ் போன்றவை எந்த வேளையிலும் தட்டுப்பாடின்றி பெற வசதி செய்துதரல் போன்ற கோரிக்கைகளும் இதில் வலியுறுத்தப்பட்டுள்ளன. [உ]

---

# பட்ஜட் பற்றிய கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டின் வரவுசெலவுத்திட்டம் பற்றிய விளக்கங்களையும் அதனால் ஏற்படும் தாக்கம் பற்றியும் தொழிலாளர் விளங்கிக் கொள்வதற்காக லங்கா தொழிற்சங்க சம்மேளன வடபிரதேசக்கிளையும் அரசாங்க பொதுச்சேவை தொழிற்சங்க சம்மேளன வடபிரதேசக்கிளையும் கூட்டங்களையும் கருத்தரங்குகளையும் நடாத்த இருக்கின்றது. இதுசம்பந்தமான கூட்டமொன்று அடுத்தமாதம் 4ம் திகதி லங்கா தொழிற்சங்க சம்மேளன காரியாலயத்தில் நடைபெறும் இக்கூட்டத்தில் பல தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் பங்குபற்றுவர். (கூ)

---

# திருட்டு அதிகரிப்பு

(கொடிகாமம்)

மட்டுவில் பகுதியில் திருட்டு அதிகரித்துள்ளது.

அருணாசலம் சதாசிவம் என்பவருக்குச்சொந்தமான 700 ரூபா பெறுமதியான சைக்கிள் மற்றொருவருக்குச் சொந்தமான 800 ரூபா பெறுமதியான சைக்கிள் சின்னத்தம்பி சண்முகம் என்பவருக்குச் சொந்தமான இரு பசுமாடுகள், கணபதிப்பிள்ளை என்பவருக்குச் சொந்தமான 4 பசுமாடுகள் திருடப்பட்டுள்ளதாகப் பொலிஸில் புகார்செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரிப் பொலிசாரும் தொண்டர்களும் ரோந்து சுற்றிவருகின்றனர். (க-அ)

......

# விஷம் குடித்தாராம் இளம் மனைவி

(திருகோணமலை)

கணவன் கண்டித்ததனால் இளம் மனைவி ஒருவர் விஷம் அருந்தித் தன்னுயிரை மாய்த்துக்கொள்ள முயன்றாராம்.

இச்சம்பவம் கிளிவெட்டிப் பகுதியில் நிகழ்ந்தது.

கணவன் மனைவியைக் கண்டித்ததற்குக் காரணம் மனைவி யாரோருவனிடம் மையல்கொண்டதே எனக் கூறப்படுகிறது. (உ)

ஆசிரியருக்குக் கடிதம்:

# நகரவாசியின் கூற்றுக்கு ஆணையாளர்தரும் விளக்கம்

தங்களது 25-11-77ம் திகதிய தினப்பதிப்பில் ஆசிரியருக்குக் கடிதங்கள் என்ற பகுதியில் ''மக்கள் துயரை அதிகரிக்கும் யாழ். சந்தை குத்தகை உயர்வு'' என்ற தலைப்பில் ஓர் ''நகரவாசி'' எழுதிய கடிதம் எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இக்கடிதம் நகர மக்கள் மத்தியில் ஓர் தப்பான அபிப்பிராயத்தை ஏற்படுத்தும் என்ற காரணத்தினால் இக்கடிதத்தை தங்களது பதிப்பில் வெளியிடுமாறு வேண்டுகின்றேன்.

யாழ். மாநகரசபை குத்தகைத் தொகையை உயர்த்தியுள்ளது என்ற தோரணையில் அக்கடிதம் எழுதப்பட்டுள்ளது ''மாநகரசபை குத்தகைத் தொகையை 1977ம் ஆண்டிலும் பார்க்க 1978க்கு மிகப் பெருமளவில் கூட்டியிருப்பது அதிர்ச்சியையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது'' என அக்கடிதத்தின் 3ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது முற்றிலும் உண்மைக்கு மாறானதாகும். சரியான நிலை என்னவெனில், நாடெங்கிலும் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் விதி முறைகளுக்கு அமைவாகவே யாழ். மரக்கறிச் சந்தைக்கு மட்டுமல்லாது மற்றைய எல்லாச் சந்தைக்கும் குத்தகை, கேள்விமுறை மூலமாகவே இதுவரை காலமும் கொடுக்கப்பட்டு வந்துள்ளது. இந்த முறைதான் இப்பொழுதும் பின்பற்றப்பட்டிருக்கிறது காலத்துக்குக்காலம் படிப்படியாக குத்தகைத் தொகை உயர்ந்துள்ளதை கடிதம் எழுதியவரே பந்தி 4ல் ஒப்புக்கொண்டுள்ளார். இம்முறையும் 1978-ம் ஆண்டுக்கான கேள்வியை, 1977-ம் ஆண்டுக் கேள்வித் தொகையிலும் பார்க்க சற்றுக் கூடுதலான கேள்வித் தொகைக்கு எழுதி, ஒரு கேள்விக்காரர் சமர்ப்பித்திருந்தார். கேள்வி நடைமுறையில் கூடுதலான கேள்வி சமர்ப்பிப்பவருக்கே குத்தகை கொடுக்கப்படவேண்டுமாதலால் அவரின் கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேலும் சபைக்கு வரவேண்டிய வருமானத்தைப் பாதிக்கக்கூடிய வகையில் எந்த நடவடிக்கையையும் நாம் எடுக்கவேண்டுமென்று யாரும் எதிர்பார்க்கமாட்டார்கள் என்றே யான் கருதுகின்றேன். அப்படி நடவடிக்கைகள் எடுக்கவும் முடியாது

நான் பொருளாதார விலை உயர்வு விடயங்களில் இறங்க விரும்பாவிட்டாலும், இந்தக் குத்தகை உயர்வு அதுவும் ஒரு கேள்விக்காரரின் குத்தகைத் தொகையாக அவரால் நிர்ணயிக்கப்பட்ட தொகை உயர்வு பொதுமக்கள் மத்தியில் பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தும் என்று நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாது. இருத்தல் ரூபா. 1-20க்கு விற்ற கோவா ரூபா 2-80க்கு உயர்ந்ததற்கு குத்தகை உயர்வு காரணமல்ல என்ற அடிப்படையை அக்கடிதத்திலேயே காணலாம். ஒரு பொருளின் விற்பனவு விலையை வியாபாரி நிர்ணயிக்கும்போது வாடகையையும் அதில் அடக்கியே நிர்ணயிக்கப்படுகிறது என்றதை யான் ஒப்புக்கொள்ளுகின்றேன். எனினும் சிறிதளவு வாடகை உயர்வு பொருளின் விலையில் தாக்கத்தை ஏற்படுத்தாது. வாடகை கூடியது என்ற போர்வையில் பொருட்களின் விலை ஏற்றப்பட்டால் வியாபாரிகள் சந்தர்ப்பத்தை தமக்கு சாதகமாக்கிக்கொள்கிறார்கள் என்றே அர்த்தமாகும். சாதாரணமாக தேவையையும் விநியோகத்தையும் பொறுத்தே பொருளாதாரப்போட்டியில் விலைகள் நிர்ணயிக்கப்படுகின்றன.

இவற்றை விட, ஆகஸ்ட் மாத வன்முறைகளின்போது பாதிக்கப்பட்ட கடைகளை மீண்டும் அமைக்கும் வேலை ஆமைவேகத்தில் நடைபெறுகிறதென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட கடைகளை மீண்டும் அமைக்கும் நிர்மாண வேலைகளை குறிப்பிட்ட கால எல்லைக்குள் செய்து முடிக்கவேண்டுமென்று ஒப்பந்தகாரர்கள் இருவருக்கும் பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன. தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் பெய்துவரும் மழையைக் காரணம் காட்டி வேலையை முடிக்கும் கால எல்லையை நீடித்துத் தரும்படி ஒப்பந்தகாரர்கள் விண்ணப்பித்திருந்தார்கள். அத்துடன் சீமெந்துத் தட்டுப்பாடு பற்றியும் குறிப்பிட்டிருந்தார்கள். கால நீடிப்பு வழங்க முடியாமைக்கு வருத்தம் தெரிவித்து பாதிக்கப்பட்ட வியாபாரிகளின் நலன்கருதி நிர்மாண வேலையை அடுத்தமாதம் 15ம் திகதிக்கு முன்னர் முடிக்க வேண்டுமென்று தந்திமூலம் ஒப்பந்தகாரர்களைப் பணித்துள்ளேன். அத்துடன் எமது மராமத்துப் பகுதி பொறியியலாளர், அத்தியட்சகர்கள் மூலமாகவும் பணிப்புரைகள் வழங்கி ஒப்பந்தகாரர்களைக் கொண்டு வேலையைத் துரிதமாக நிறைவேற்றநடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளேன். அவர்களும் நடவடிக்கை எடுத்துள்ளார்கள் என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

சந்தையிலுள்ள வியாபாரிகளிடமிருந்துவாடகைப்பணம் அறவிடுபவர்கள் 'குத்தகைக்காரர்கள். கேள்விகள் மூலம்

(5-ம்பக்கம் பார்க்க)

# இந்திய பயணம்: அரசுதெளிவு படுத்துமா?

இலங்கையர் - இந்தியப் பயணம் மேற்கொள்வது பற்றிய விபரங்களை அரசாங்கம் தெளிவாக அறிவிக்காதது குழப்பத்தை ஏற்படுத்துவதாக உள்ளது.

இலங்கைக்கு வெளிநாட்டார் பலர் குறிப்பாக மேலைநாட்டார் வந்துபோகிறார்கள். இவர்களில் பலர் ஒரு மாத காலம் வரை இங்கு தங்கியிருந்து பல்வேறு இடங்களையும் பார்வையிட்டு நாடு திரும்புகின்றனர்.

இவர்கள் மூலமாக நம்நாடு பெரும் பணத்தை வசூலிக்கிறது.

இதேபோல இலங்கையரும் இந்தியா சென்று ஒரு மாத காலம் வரை தங்கிநிற்க அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும் குறிப்பிட்ட அளவு பணத்தைக்கொண்டு செல்ல முடியாவிடின் அப்பயணத்தால் பலன் கிடைக்கப் போவதில்லை.

உதாரணமாக ரூபா 99-50 சதம் கொடுத்து யாழ்ப்பாணத்தில் இருந்து ரிக்கட் பெற்றுக்கொண்டால் குறிப்பிட்ட ஓர் இடத்தை இந்தியாவில் அடைய வாய்ப்பு ஏற்படினும் அங்கு ஒரு மாதம் தங்கிநின்று பல்வேறு இடங்களையும் சென்று பார்வையிடுவதற்கு போதிய பணம் வேண்டுமே.

அங்கு தங்கும்போது செலவுக்கு எவ்வளவு பணம் கொண்டுசெல்ல முடியும் என்று அரசு தெரிவிக்கவில்லை.

இதுபற்றிய விபரங்களை அரசு உடன் வெளியிட்டு ஏழைமக்களுக்கும் இவ்வாய்ப்பு கிடைக்க வழியமைக்க வேண்டும்.

மூ. பரமநாதன்.
காரைநகர்.

# இந்த அரசில் விவசாயிகளும் பாவனையாளரும் பயனடைவரா?

இலங்கையின் மறைந்த பிரதமர்கள் டி. எஸ். சேனநாயக்கா, டட்லி சேனநாயக்கா ஆகியோர் விவசாயத்துறை வளர்ச்சிக்கு ஆற்றிய பங்கு மகத்தானது. டி. எஸ். சேனநாயக்காவுக்குப்பின் ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர் கைத்தொழில்துறையை வளர்த்தார்களேயன்றி விவசாயத்துக்கு எதுவித ஊக்கமும் கொடுக்கவில்லை. இந்நாட்டின் வளர்ச்சிக்கு விவசாயத்தின் பங்கு மகத்தானது என்பதை உணர்ந்த அமரர் டட்லி சேனநாயக்கா 1965ம் ஆண்டு பிரதமரானார். இலங்கையின் விவசாயத்தின் வளர்ச்சி ஆரம்பமாகியது.

1965-70 காலத்தில் அரசாங்கம் விவசாய வளர்ச்சிக்குத் தம்மால் இயலக்கூடிய சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கியது. ஆனால் விவசாயிகளுடன் தொடர்புடைய அதிகாரிகள் பூரண ஒத்துழைப்பை வழங்கவில்லை. அத்துடன் இளைஞர்கள் விவசாயத்தில் போதிய ஆர்வம் காட்டாது உத்யோகத்தை நம்பியிருந்தனர். இக்காலத்தில் நெல் உற்பத்தி கணிசமான அளவு அதிகரித்தது. உபஉணவுச் செய்கையில் புதியதோர் அத்தியாயம் ஆரம்பமாகியது. இன்று உப உணவுற்பத்தியில் முன்னணி வகிக்கும்பெரும்பாலான குடியேற்றத்திட்டங்களும் இக்காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டன. மகாவலி திசைதிருப்பும் திட்டம் ஆரம்பிப்பதற்கான வேலைகள் நடைபெற்றன.

1965-70ல் அரசாங்கம் கொடுத்த ஊக்கத்தால் விவசாயிகள் மிளகாய் உற்பத்தி மூலம் அதிக இலாபம் அடைந்தனர். விவசாயிகளினதும் பாவனையாளர்களதும் நலன் சமகாலத்தில் பேணப்பட்டது. பாவனையாளர்களுக்கு ஒரு ரூபா 70 சதமாக மிளகாய் வழங்கப்பட்ட அதே நேரம் விவசாயிகளிடம் ரூபா 2-60 வீதம் கொள்வனவுசெய்யப்பட்டது. 1965-72க்குஇடைப்பட்ட காலத்தில் விவசாயத்தில் குறைந்தவிலைக்கு மிளகாய் விற்றபோதும் உற்பத்திச் செலவு குறைவான காரணத்தால் அதிக இலாபமடைவதன் மூலம் தம்து வாழ்க்கையை விவசாயிகள் வளமாக்கக்கூடியதாக இருந்து

1970 77க்கு இடைப்பட்ட காலத்தில் மிளகாய் உற்பத்தி செய்த விவசாயிபெற்ற சராசரி விலை 10 ரூபாவாகும். மிளகாய் 25 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டாலும் மிளகாயைப் பதுக்கிவைக்கும் தரகர்களே மேற்படி இலாபத்தைப் பெற்றனர். இக்காலத்தில் விவசாய உற்பத்திச் சாதனங்களின் விலை பலமடங்கு அதிகரித்தது உதாரணமாக.

| | 1965—70 | 1970—77 |
|---|---|---|
| நீர்இறைக்கும் இயந்திரம் | 1500/- 3000/- | 5000/- 7000/- -தட்டுப்பாடு |
| தெளிகருவி (Sprayer) | 200/- 300/- | 650/- 1200/- -பெர்மிட்டுக்கு விலைகுறைவு |
| 1 அந்தர் உரம் (சராசரி) | 16/50 | 65/- |
| கிருமிநாசினி 16 அவுன்ஸ் அசோடின் | 16/- | 72/- |
| கிருமிநாசினி 17 அவுன்ஸ் என்ரின் | 5/40 | 30/- -தட்டுப்பாடு |
| 16 அவுன்ஸ் கிருமிநாசினியின் குறைந்தவிலை | 5/40 | 32/- |
| மண்ணெண்ணெய் கலன் | -/98 | 4/32 |
| கூலி ஆண் | 5/- | 10/- |
| கூலி பெண் | 2/50 | 5/- |

அத்துடன் உரம், கிருமி நாசினிகளில் கலப்படம் செய்யப்பட்டதாகக் கதை அடிபட்டது. கூட்டுத்தாபனத்தின் பொருட்களையே விவசாயிகள் நம்பிப் பாவிக்கமுடியவில்லை. கூட்டுத்தாபனத்தின் கிருமிநாசினியைதெளித்ததன்மூலம் பயிர்கள் முற்றாக அழிந்து விவசாயத்தைக் கைவிட்ட விவசாயிகளின் சரித்திரத்தை யாழ்ப்பாணத்தில் அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய திரு. விமல் அமரசேகர நன்கறிவார். தது ஆகவே இவ்வாட்சியில் விவசாயிகளும் பாவனையாளர்களும் ஒருங்கே நன்மையடைய முடியுமெனத்திடமாக நம்புவதுடன் அரசு உடனடியாக கவனத்திற்கொள்ள வேண்டிய சில விடயங்களையும் முன்வைக்கிறோம்.

[1]அரசாங்கம் கமத்தொழில் இலாகாவூடாக நியமித்துள்ள தொடர்பு சமக்காரர்களின் கூட்டங்களை மிளகாய் அதிகமாக உற்பத்திசெய்யும் பிரதேசங்களில் கூட்டி மிளகாயின்

சொ. யோகநாதன்
(செயலாளர் விசுவமடு விவசாயிகள் கழகம்)

1970-77 காலத்தில் இந்நாட்டின் சாதாரணதர மக்கள் குறிப்பாக அரசாங்க ஊழியர்கள் மிகக்கடுமையாகப் பாதிக்கப்பட்டார்கள். அமரர் டட்லியினால் ஆரம்பிக்கப்பட்ட உப உணவு உற்பத்திமூலம் விவசாயிகள் மேற்படி பாதிப்பில் இருந்து தப்பினார்கள். அதேநேரம் இக்காலத்தில் விவசாயிகள் நன்மையடையவில்லை. விவசாயிகளின் உற்பத்திப்பெருக்கத்தால் அரசு நிலைக்கமுடிந்தது.

1977முதல்ஆட்சியில்இருக்கப் போகின்ற அரசு அமரர் டட்லி சேனநாயக்காவின் வழிவந் உற்பத்திச் செலவைக் கணிக்குப்படி மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகளை பணித்தல்.

[2]உற்பத்திச் செலவைக் குறைக்க நடவடிக்கை எடுத்தல்.

[3]மிளகாயை உத்தரதாத விலைக்கு எக்காலத்திலும் அரசாங்கம் கொள்வனவு செய்தல்.

[4] மிளகாய் பற்றுக்குறை இருப்பின் பங்கீட்டுக்கு நிதான விலைக்கு வழங்குதல், மிளகாய் முழுவதையும் அரசு கொள்வனவு செய்தல்.

## வவுனியாவில் வெள்ளக் கொடுமை

(வவுனியா)

வவுனியாப் பகுதியில் தொடர்ந்து பெய்யும் மழையினால் நெற்செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே பலவித இன்னல்களுக்கிடையில் அதிக விலை கொடுத்து வாங்கி விதைத்த நெற்பயிர்கள் யாவும் வெள்ளம் வயல்களில் தேங்கி நின்றுகொண்டிருப்பதனால் அழுகி அழிந்துவிடுமோ என விவசாயிகள் கவலைப்படுகின்றனர்.

இதனால் இதுவரையும் விதைக்காத விவசாயிகள் தாம் தொடர்ந்து விதைக்கமுடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது என்றும் கவலை தெரிவித்தனர். எத்தனையோ இடங்களில் விதைக்கப்பட்ட உழுந்தும் இந்த மழையினால் அழிந்துவிட்டதால் உழுந்தின் விலையும் இவ்வருடம் அதிகரிக்கலாம் என கருதப்படுகிறது. (உ)

## சொக்கனின் நூல் ஜனவரியில் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தமிழர்தம் கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் பேணத்தக்க நூல்களை வெளியிடுவதன் மூலம் தமிழர் தம் பாரம்பரியம் பேணிக்காக்கப்படும் என்றும் ஈழத்து இலக்கிய கர்த்தாக்களின் இத்தகைய படைப்புக்களை வெளியிடுவதற்காக யாழ்ப்பாணத்தில் ஒரு வெளியீட்டுக் கழகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் முத்தமிழ் வெளியீட்டுக் கழகம் என்ற இக்கழகம் அதன் முதலாவது பணியினை ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர் 'சொக்கன்' எழுதிய 'ஈழத்துத் தமிழ் நாடக இலக்கிய வளர்ச்சி' என்ற நூலை எதிர்வரும் ஜனவரியில் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் வெளியிடவிருப்பதாகவும் கழகப் பொதுச்செயலாளர் திரு. த. பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து மாதமொரு புத்தகத்தை வெளியிடுவதற்குக் கழகம் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (கா-அ)

## விவசாயிகள் கஷ்டம்

(சங்கானை)

மண்வெட்டி, பிக்கான் போன்ற விவசாய உபகரணங்களுக்கு வடபகுதியில் தட்டுப்பாடு நிலவுகின்றது.

வலிமேற்கிலிருக்கும் விவசாயிகள் சிலர் யாழ்ப்பாணத்திற்குச்சென்றுஇரும்புக்கூட்டுத்தாபனம் முதல் ஏனைய சகல இரும்புக்கடைகளிலும் தமக்கான மண்வெட்டி, பிக்கான் போன்ற உபகரணங்கள் பெறுவதற்கு முயற்சித்து ஏமாற்றம் அடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சித்தன்கேணி கணேசவித்தியாசாலையில் தொடர்பு விவசாயிகளுக்கு என சங்கானை ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. கே. லோகேஸ்வரன் கூட்டிய கூட்டத்தில் விவசாயிகள் படும் இன்னல்பற்றி முன்னைநாள் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் திரு என். சிவஞானம், விளக்கினார். (உ)

## தட்டுப்பாடு

(திருகோணமலை)

திருகோணமலையில் சகல ரக அப்பியாசக் கொப்பிகளுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் இங்குள்ள பாடசாலைப் பிள்ளைகள் தங்கள் தேவைக்கு அப்பியாசக் கொப்பிகள் இல்லையே எனத் தவிக்கிறார்கள். (உ)

## அத்துளுகுளத்தில்

(நெல்லியடி)

கரவெட்டி அத்துளு குளத்தில் முதலையிருப்பதால் மக்கள் குளத்தில் நன்னீர் எடுப்பதை நிறுத்தியுள்ளனர் இதனால் மக்கள் நீரின்றிக் கஷ்டப்படுகின்றனர். (க-அ)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

Regal (Jaffna) [Today only]
Daily at 4-45 7-00 & 9-30 P. M. only
LEX BARKER in
Fury Of The Sabers
[Color Scope]

From Tomorrow
MAXIMILIAN SCHELL...DIANE BAKER
in
"Karakatoa East of Java"
Cinerama wide screen 70 m. m. [Techni color]

ராணி (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
முத்துராமன் - நாகேஷ் - சச்சு
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30 9-30
தேவரின்
பெண் தெய்வம்

RIO (Jaffna) Daily 10-30 4-45 7-15&9-45 P. M.
THE RAILWAY CHILDREN
(Wonderful Family Entertainment)
Special school shows at 1-30 P. M. by prior arrangement.

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர். சரோஜாதேவி
நடித்த
தாயைக் காத்த தனயன்
(புதிய பிரதி)

8-வது ஜனத்திரள் வாரம்!
ராஜா யாழ்நகர்
தினசரி 10-30, 2-15, 6-15, 9-45
ஜெமினி, ஜெயசித்திரா
நடித்த
தசாவதாரம்
பாடசாலை மாணவர்கள் ஆசனங்களை பதிவுசெய்து கொள்ளவும்.

மனோஹரா (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன்-ஜெமினி கணேசன்
சுப்பையா - லக்ஷ்மி - நிர்மலா
நடிக்கும்
சுஜாதாவின்
உனக்காக நான்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
துணிவே துணை

லிடோ எம். ஜி. ஆர். — லதா நடித்த
(யாழ். நகர்) போன்; 7693
நீதிக்கு தலைவணங்கு


## "எழுத்து நூலின் பெருமையை காலம் உணர்த்தும்"

### நூல் அறிமுகவிழாவில் உரை

(யாழ்ப்பாணம்)

"சொல், வாக்கியம் முதலியவற்றிற்கு எல்லா மொழிகளிலும் இலக்கண நூல் உள்ளன. ஆனால் எழுத்துக்கென ஒரு இலக்கண நூல் இதுவரை தோன்றியதில்லை. தமிழ் எழுத்தின் இலக்கணத்துக்கென ஒரு "எழுத்து நூல்" தோன்றியுள்ளது. இதன் பெருமை உடன் தெரியாதிருக்கலாம், ஆனால் இன்னும் 25 வருடங்களுக்குப் பின்னால் 'நன்னூல்' போன்றதொரு இலக்கண நூலாக இது மிளிரும்."

இவ்வாறு மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஆதரவில் மட்டக்களப்பு பொது நூல் நிலைய மண்டபத்தில் நடைபெற்ற "ஈழத்துப் பூராடனின் எழுத்தியல்" அறிமுக விழாவில் உரையாற்றிய வித்துவான் பண்டிதர் சி. கந்தையா கூறினார்.

நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவரான திரு. ரி. பாக்கியநாயகம் உரையாற்றுகையில், "ஈழத்தில் நூல் வெளியிடுவது என்பது பிரமசாத்தியமாக இருக்கும் போது இதுவரை 44 நூல்களை எழுதி வெளியிட்டு 'ஈழத்துப் பூராடனார்' அவர்கள் மிகப் பெரிய சாதனை புரிந்துள்ளார். இந்தவரிசையில் 'எழுத்து நூல்' என்ற இந்த அரிய இலக்கிய நூலை, மிகுந்த ஆராய்ச்சியின்பின் வெளியிட்டுள்ளார் இவர்இந்நூல் தமிழ் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பெரிதும் பயன்படும்" என்று கூறினார்.

நூலாசிரியரான திரு. க. தா. செல்வராஜகோபால் (ஈழத்துப் பூராடனார்) பேசுகையில் "பல வருட முயற்சியின்பின் இந்நூல் உருவாகியுள்ளது. இந்நூல் கையெழுத்துப் பிரதியாக இருந்தபோது இதைப் பார்வையிட்ட சிலஅறிஞர்கள் மாறுபட்ட அபிப்பிராயங்களைச் சொல்லியிருந்தார்கள். இருந்போதிலும் ஆதாரபூர்வமான சில குறிப்புக்களுடன் இந்நூல் எழுதப்பட்டதால் அவர்களின் அபிப்பிராயங்களை நான் பொருட்படுத்தவில்லை. முக்கியமாக இந்நூலில் கூறப்பட்டுள்ள எழுத்து மாற்றம் பற்றிக் குறிப்பிடவேண்டும். தொல்காப்பியர் காலத்திலிருந்து வீரமாமுனிவர் காலம் வரை தமிழ் எழுத்துக்களில் மாற்றம் ஏற்பட்டுவந்துள்ளது இனியும் மாற்றங்கள் ஏற்படவே செய்யும். இந்த மாற்றங்களை அறிஞர்கள் செய்வதில்லை. காலம்தான் செய்கிறது. காலப்போக்கில் எழுத்தில் ஏற்படக்கூடிய மாற்றங்களை யாரும் தடுத்து நிறுத்த முடியாது, நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் காலத்தின் தேவைக்கேற்ப அவற்றை நாம் ஏற்றுக்கொள்ளத்தான்வேண்டும். ஆகவேதான் அச்சக, தட்டெழுத்து வசதிகளை மனதில்கொண்டு தமிழிலுள்ள எழுத்துக்களைக் குறைக்கும் முகமாக, தமிழ் எழுத்துக்களில் செய்யவேண்டிய மாற்றங்கள்பற்றி இந்நூலில் கூறப்பட்டுள்ளது. இம்மாற்றங்கள் இன்னும் சில வருடங்களில் தமிழில் ஏற்பட்டே தீரும்" என்றார்.

இளைப்பாறிய அதிபர் திரு. பி. டி. ஐங்கரப்பிள்ளை, 'அன்புமணி' ஆகியோர்அறிமுகஉரை வழங்க, உரையாசிரியரான திருமதி செல்வராசகோபால் பதிலுரை வழங்கினார். (கா-உ)

## நகரவாசியின்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட சந்தைகளிலிருந்து மாநகரசபை வாடகைப்பணம் அறவிடுவதில்லை என்பதையும், வாடகையை நாமாகவே கூட்டவில்லை என்பதையும் பொது மக்கள்கவனத்திற்குக்கொண்டு வர விரும்புகின்றேன்.

க. சிவஞானம்,
விசேட ஆணையாளரும்.
மாநகர ஆணையாளரும்.
நகரமண்டபம்,
யாழ்ப்பாணம்.
26-11-77


30-11-77 வரை
வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர்.
உலகம் சுற்றும் வாலிபன்
(கலர்)

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு பி. ப. 2-30
ஜெமினி - வைஜெந்திமாலா
பார்த்திபன் கனவு

4-ந் திகதி வரை
புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-30
ஞாயிறு 3 காட்சிகள்
எம். ஜி. ஆர்-லதா
உழைக்கும் கரங்கள்


## 'பாதகச் செயல்களை விடுத்து இறைபக்தி கொள்வீர்'

(யாழ்ப்பாணம்)

"இளம் சந்ததியினர் வன்முறைகளில் ஈடுபடுவதனை சமயம் ஒருபோதும் அனுமதித்ததில்லை. பாதகச் செயல்களில் ஈடுபடாது இளம் சந்ததியினர் இறை பக்திமிக்கவர்களாக வாழவேண்டும்."

இவ்வாறு மல்லாகத்தில் நடைபெற்ற இளைஞர் எழுச்சி விழாவிலும் கந்தப்பெருமான் சூரசங்காரப் போதனையிலும், விசேட அபிஷேக அர்ச்சனை வழிபாடுகளிலும் கலந்துகொண்டு தலைமைதாங்கி உரை நிகழ்த்திய ஸ்ரீலஸ்ரீ சுவாமி விஸ்வநாதசிவாசக்யர் குறிப்பிட்டார். (கா-உ)

## காங்கேசன் தபால் ஊழியர் வெற்றி

[யாழ்ப்பாணம்]

காங்கேசன்துறை பட்டினசபை ஊழியர் கோஷ்டிக்கும் கங்கேசன்துறை தபால் கந்தோர் ஊழியர் கோஷ்டிக்கும் இடையே நடந்த சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் 2-1 கோல்களால் தபால் ஊழியர் வெற்றியீட்டினர்.

காங்கேசன்துறை பட்டினசபை மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. கே. தனபாலசிங்கம் மத்தியஸ்தம் வகித்தார். [உ]

ஃ ஃ ஃ

[யாழ்ப்பாணம்]

நவாலி சென்பீற்றர் உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் கொக்குவில் பொற்பதி உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் 2-0 கோல்களால் சென். பீற்றர்கோஷ்டி வெற்றியீட்டியது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. சதானந்தன் நடுவராகப் பணியாற்றினர். (உ)

ஃ ஃ ஃ

(வவனியா)

வவனியா மகாவித்தியாலயத்திற்கும் செல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

வவனியா மகாவித்தியாலயத்திற்கும் யாழ். வளாக மாணவர்களுக்கும் இடையே நடைபெற்ற சினேகபூர்வ போட்டியும் இவ்விதமே முடிந்தது.

வவனியா வித்தியாலயத்தும் இளவாலை சென்ஹென்றிஸ் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் இளவாலை கோஷ்டி 5-0 கோல்களால் வெற்றியீட்டியது

திரு. கா. லோகசிங்கம் நடுவராகப் பணியாற்றினர். (உ)

## இடமாற்றம்

(சங்கானை)

வேலணை உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய திரு. மூத்தையா சுப்பிரமணியம் சங்கானை வலி மேற்கு உதவி அரசாங்க அதிபராக இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்.

சங்கானை உதவி அரசாங்க அதிபராக கடந்த ஆறு வருட காலமாகக் கடமையாற்றிய திரு. சோ. அருணாசலம் ஒய்வுபெற்றதையடுத்து இந்த இடமாற்றம் நடைபெற்றுள்ளது. —... (உ)

## பாராட்டு

(பூநகரி)

பூநகரி கிராமாட்சி மன்றத்தில் கடமையாற்றும் வருமான வரி வேலை மேற்பார்வையாளர் திரு. ஆ. இராசதுரை தமது விடாமுயற்சியால் அறவிட முடியாத பல ஏக்கர் வரி நிலுவைகளை அறவிட்டு கிராமாட்சிமன்றவளர்ச்சியை மேல் ஓங்கச் செய்துவரும் சேவைக்கு பூநகரி மக்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

## நிர்வாகிகள்

(சங்கானை)

சங்கானை கலாச்சார சமூக முன்னேற்ற மன்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்; திரு. சி. க. கணேசன், உபதலைவர்: க. கந்தையா, செயலாளர்; மா. செல்லக்கண்டு, உபசெயலாளர், க. சண்முகநாதன், பொருளாளர்: க. இராசேந்திரன்.

ஆறு செயற்குழு உறுப்பினர்களும் தெரிவாகினர். (உ)


வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்
★ கமலஹாசன் ★ ரஜனிகாந்த்
★ எம். எஸ். விஸ்வநாத் ஸ்ரீதேவி
★ ஒய். விஜயா அநுபாமா
R. M. S. புரொடக்ஷன்ஸ் அளிக்கும்.
மூன்று முடிச்சு
திரைக்கதை, வசனம், டைரக்ஷன் கே பாலசந்தர்.

சாந்தி (யாழ். நகர்) போன்; 7642.
தினசரி 5 காட்சிகள்.
10-30, 2-30, 4-45, 7-00 9-30.
A Grand Release!
"UP POMPAI" [Color]

### மணிவாக்கு

நோயுற்ற உடலைத் தாங்கிக் கொள்ளலாம். ஆனால், நோயுற்ற மனதைத் தாங்கமுடியாது.

—காந்திமகான்


# ஈழநாடு
The Eelanaadu


## கட்டாய வேலைவாய்ப்பு!

வேலையில்லாதிருக்கும் வாலிபர்களுக்கு கட்டாய வேலைத்திட்டம் கொண்டு வருவதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளதாகஒருசெய்தி கூறுகிறது.

இது உண்மையானால் வரவேற்கவேண்டியதே.

வேலையில்லாதிருக்கும் இளைஞர்களுக்கு வேலை கிடைக்கும்வரை நிவாரண உதவியாக மாதம் ஐம்பது ரூபாய் அலவன்ஸ் வழங்கப் போவதாக நிதி அமைச்சர் திரு. ரொனி டி மெல் தமது வரவு-செலவுத் திட்டத்தில் தெரிவித்திருந்தார்.

ஊழலும் மோசடியும் நிறைந்துபோன ஒரு நாட்டில் ஐம்பது ரூபாய் சும்மா கிடைக்க விரும்பதென்ருல் ஊழலும் மோசடியும் எந்த அளவுக்கு அதிகரிக்கும் என்பதைப்பற்றிச் சொல்லத் தேவையில்லை.

இலவசஅரிசி, இலவச சிகிச்சை, இலவசக்கல்வி என்பதுடன் இலவசச் சம்பளம் என்பது நாட்டில் மேலும் சோம்பேறி வாழ்க்கைக்கே இடமளிக்கும்.

தொழிலில் ஏற்றத் தாழ்வு, சொகுசான வாழ்க்கை, அதிக வருமானம் ஆகிய காரணங்களினுல் தான் நமது நாட்டுஇளைஞர், கள் பலரும்வெளிநாடுகளில் வேலைவாய்ப்புத்தேடிச் செல்கின்றனர்.

பெரும்பாலான இளைஞர்கள் வெளிநாடுகளில்போய்ச் செய்யும் தொழில்களை இங்கேயே செய்துகொள்ள முடியும்.

நமது நாட்டில் வேலை வாய்ப்புக் களில்லாமலில்லை. இன்னமும் வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்களுமிருக்கின்றன.

நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களில் இந்த நாட்டு இளைஞர்கள் கட்டாயமாகப் பங்குபற்றக்கூடியமுறையில் இளைஞர்களின் தகுதிக்கும் திறமைக்குமேற்பத்தொழில் வழங்குவதற்கான திட்டம் வகுக்க பட்வேண்டும்.

உண்மையாகவே வேலை வாய்ப்பின்றியிருக்கும் இளைஞர்கள் பற்றிய விபரங்கள் திரட்டப்பட வேண்டும்.

இந்த வகையில் இளைஞர்களுக்கான கட்டாய வேலை வாய்ப்பு யோசனையை வரவேற்கலாம்.

அச்சுவேலி ப. நோ. கூ. சங்க

# கொள்ளை வழக்கு இன்று விசாரணை

[யாழ்ப்பாணம்]

அச்சுவேலி பலநோக்குக்கூட்டுறவு சங்க கொள்ளை வழக்கு இன்று காலை யாழ். மேல்நீதி மன்றத்தில் நீதிபதி ஜனுப் எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இவ்வழக்கு நேற்றுக் காலை யாழ் மாவட்ட நீதிபதி திரு, ஆசீர்வாதம் முன்னிலையில் கூப்பிடப்பட்டு இன்று காலை வரை ஒத்திப்போடப்பட்டது. எதிரிகள் மூவரும் நேற்று கோர்ட்டில் ஆஜர்செய்யப்பட்டிருந்தனர்.

எதிரிகளை தலா 50,000 ரூபா பிணையில் செல்ல, அனுமதித்தும், எவரும் பிணையில் செல்லவில்லை. (க)

## கருணாநிதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னர் தாமதமாகத் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது" என்று கூறி, தி. மு. கழகத் தலைவர்களின் போராட்டம் விசித்திரமாக இருக்கிறதென்றும் தெரிவித்தார்.

## சுதந்திரத்தை மீட்க...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று பிரகடனப்படுத்தியது. ஆனால் அதற்கான நடவடிக்கைகளை தமிழர் விடுதலைக் கூட்டணிஎடுப்பதாக நாம்கொள்ளவில்லை.

கீழ்க்காணும் தீர்மானங்களும் நிறைவேறின;

"திராவிட முன்னேற்ற கழகத்தலைவரும்,தமிழ்நாடுஎதிர்க் கட்சித் தலைவருமான கலைஞர் மு. கருணாநிதியை, தமிழக ஆட்சிபீடம், பழிவாங்கும் நோக்குடன், தொடர்ந்து சிறையில், அடைத்துவைத்திருப்பதை வேதனையோடு கண்டனம் தெரிவிப்பதுடன், உடனடியாக அவரை விடுதலை செய்யவேண்டும் என தமிழக அரசை வலியுறுத்துகிறது.

'புயல், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு உயிரையும் உடமைகளையும் இழந்த தமிழகமக்களுக்கு பேரவை ஆழ்ந்த அனுதாபத்தைதெரிவிக்கிறது.

'தமிழ் இளைஞர் பேரவை புதிய அமைப்புவிதிப்படி தமிழ் ஈழலட்சியத்தை அடைவதற்கான விடுதலை இயக்கத்தை அமைப்பதன் பொருட்டு, ஜனவரி மாதம் முதல் தொகுதி ரீதியாக இயக்கவேலைகளை ஆரம்பிப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டது.'

'இயக்க வேலையில் முதல் கட்டமாக, டிசம்பர் மாதம் 1ம் தேதி முதல், தொகுதிகள் தோறும், முக்கிய உறுப்பினர்களையும், தொண்டர்களையும் திரட்டி, அமைப்பு ஏற்படுத்துவதுபற்றி விளக்கம் அளிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.'

அடுத்த இளைஞர் பேரவைக் கூட்டத்தை பட்டிருப்புத் தொகுதியில், நடத்துவதென ஏகமனதாகத் தீர்மானிக்கப் பட்டது. (க)

## இன்று

[கொழும்பு]

இலங்கை-அல்பேனிய நட்புறவுச் சங்கத்தின் ஆதரவில் அல்பேனிய சோஷலிஸ குடியரசின் 33வது ஆண்டு நிறைவு விழா இன்று பிற்பகல் கொண்டாடப்படுகிறது.

கொம்பனித்தெருசீவலி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளர் திரு. என். சண்முகதாஸன் உட்பட மற்றும் சிலர் உரையாற்றுவர். [உ]

0 0 0

திருக்குடும்ப கன்னியர் ஆங்கில மகளிர் கல்லூரி எச். என். சீ. ஈ. மாணவிகள் சுகாதார தின விழாவொன்றை இன்று காலை ஒழுங்குசெய்துள்ளனர்.

இவர்கள் இதையொட்டி பொருட்காட்சி ஒன்றை ஓடக்கரைவீதியில் அமைந்துள்ள சுகாதார வெள்ளிவிழா மண்டபத்தில் நடாத்துகின்றனர். [கி]

## ஏற்பதா?...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ளாக இளைஞர்கள் தினமும் குழுமியிருக்கின்றார்கள். இந்த நிலையில்,நாம் மாவட்ட மந்திரி பதவியை ஏற்றால், தமிழ் இளைஞர்களின் வேலையில்லாப் பிரச்னையைப் பெருமளவில் தீர்க்கலாம்.

இப்பதவியை கூட்டணி அல்லாத வேறு ஒரு எம். பி. ஏற்றால், அவர் ஐக்கிய இலங்கை ஒற்றை ஆட்சி என்ற அரசியல் சித்தாந்தத்தை இப்பதவியின் உதவியுடன் வளர்க்கப்பார்ப்பார்.

"எதிர்க்கட்சி தலைவர் பதவியை ஏற்றதன் மூலம் உலக அரங்கில் நம் அரசியல் கொள்கையைப் பகிரங்கப் படுத்துவது போல் மாவட்ட மந்திரிபதவியை ஏற்றால் தமிழ் ஈழப்பொருளாதாரத்தில் மேம்படமுடியும்.

சுயமாக நாம் தமிழ்ஈழத்தில் பொருளாதாரத்தை அபிவிருத்திசெய்ய முடியாமலிருக்கின்றது. அதற்கு அரசின் உதவியை நாட வேண்டிய நிலையிலிருக்கிறோம் ஆதலால் இதற்கு மாவட்ட மந்திரிபதவி பெரும் வாய்ப்பாக அமையும். [க-அ]


யாழ். நகரில்

# எஸ்.பி. சாமி அன் கொம்பனி

கிளை நிறுவனம்

193, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(பஸ் நிலைய வடக்குவீதி)



## திறப்புவிழா



நாளை 30-11-77 புதன்கிழமை

காலை 9 மணிமுதல் 9-30 மணிவரையுள்ள

சுப நேரத்தில்

யாழ்ப்பாணத் தொகுதி

தேசியஅரசுப் பேரவை உறுப்பினர்

## திரு. வெ. யோகேஸ்வரன்

அவர்களால் திறந்து வைக்கப்படுமென்பதை

வடமாகாண மக்களுக்கு

மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

இவ்விழாவில் கலந்து சிறப்பிக்க அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எஸ். பி. சாமி அன் கோ., கொழும்பு,

யுனைட்டெட் மேர்ச்சன்ட் லிமிட்.,

கொழும்பு.

மரைக்கார் லங்கா லிமிட்.,

கொழும்பு—கண்டி.

ஹெம் புரடக்ஷன்ஸ், கொழும்பு.

அரச உரக்கூட்டுத்தாபனம், சீமெந்துக் கூட்டுத்தாபனம், பலவகை இருமிநாசினி உற்பத்தி ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்களும், கால்நடைஉணவு, சாய்ப்புச்சாமான், மாளிகைச்சாமான், மருந்து வகைகளின் வடபகுதி விநியோகஸ்தர்களும்.

பிரதி ஞாயிற்றுக்கிழமைதோறும் மாலை 3-45 மணிக்கு எமது விசேட வானெலி நிகழ்ச்சியான வரணியூரானின் "குளறி கந்தையா" நகைச்சுவை நாடகத்தைக் கேட்டு மகிழலாம்.



## வட இலங்கை விவசாயிகட்கோர் நற்செய்தி

★ செத்தல் மிளகாய் ★ வெங்காயம் ★ உருளைக்கிழங்கு ★ கடலை ★ பயறு வகை போன்ற உங்களின் உற்பத்திப் பொருட்களைக் கொழும்பில் கூடிய விலையில் விற்றுக்கொடுப்பதற்கு நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியவர்கள்:

# அரசன் கொம்பனி

72 ஏ, நாலாம் குறுக்குத் தெரு, கொழும்பு-11. தொலைபேசி: 29407


இப்பத்திரிகை 'ஈழநாடு. லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு நவம்பர் மாதம் 29-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as News paper in Sri lanka.